செ. கு. எண்: 194 நாள் : 22.07.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 22.7.2013

சென்னை மாவட்டம், வியாசர்பாடி, சஞ்சய் நகரைச் சேர்ந்த திரு. ஐதர்கான் என்பவரின் மகன் செல்வன் இர்பான் கான் என்பவர் 18.7.2013 அன்று புளியந்தோப்பு வ.உ.சி நகர், டாக்டர் அம்பேத்கார் கல்லூரிச் சாலையில், சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, பின்னால் வந்த மாநகராட்சி லாரி மோதியதில், சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்த செல்வன் இர்பான் கானின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த துயர சம்பவத்தில் அகால மரணமடைந்த செல்வன் இர்பான் கானின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9